DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : **மாரிமுத்து** (P.w. 6)
Father/Husband Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of May 2026

( 1, 2 எதிரி ஆஜர் . 3, 4வது ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உளுத்திமடையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை மாலை 6.30மணியளவில் நாகலிங்கம் வீட்டின் வழியாக நானும், பாண்டியராஜன் என்பவரும் நடந்து வந்து கொண்டிருந்தபோது கட்டனூர் போலிசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் பாண்டியராஜனும் கையொப்பம் செய்தோம். **(அந்த பார்வை மகஜர்**

**அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

நான் உளுத்திமடை ஊருக்குள் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகள் குடியிருக்கும் இடம் காலனி என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரிகளின் தெருவிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 3/4 கிமீ தூரம் இருக்கும். போலிசார் வந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் எதற்காக நாகலிங்கம் இடத்திற்கு சென்றேன் என்று போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால் ஆமாம். எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியுமா என்றால் சண்டை நடந்தது சம்பந்தமாக வரைபடம் போட்டோ எடுத்தார்கள். அதில் என்ன எழுதி இருந்தது யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் யார் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் போலிசார் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வேறு வழக்கிற்காக காவல் நிலையம் சென்றபோது போலிசார் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.